# தமிழ் எழுத்து

தமிழகத்தில் வழக்கிலிருந்த மிகத்தொன்மையான தமிழ் எழுத்துகளை 'தமிழி' என்று பண்டைய நூல் குறிக்கிறது. அவை தமிழ் மொழியை எழுத வழங்கப்பட்டுள்ளன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து அவ்வெழுத்துகளில் எளிதில் அறியக்கூடிய சில உருவ மாற்றங்கள் காணப்படுகின்றன. இம்மாற்றங்கள் இரண்டு பிரிவைத் தோற்றுவிக்கும் வகையில் காணப்படுகின்றன. ஒன்று தமிழ் என்று அழைக்கப்படும் எழுத்துகளின் தொடக்கத்தையும், மற்றது வட்டெழுத்து என்று அழைக்கப்படும் எழுத்துகளின் தொடக்கத்தையும் காட்டுகின்றன. ஆயினும் இருவகை எழுத்துகளும் ஒரே கல்வெட்டில் காணப்படுகின்றன.


ஆதலின் கி.பி. 3-ம் நூற்றாண்டில் இருந்து தமிழ்மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கத்தில் வந்தன. ஒன்று தமிழ் என்றும் மற்றது வட்டெழுத்து என்றும் கூறலாம். இதற்கு எடுத்துக்காட்டு அரச்சலூர் கல்வெட்டு ஆகும்.

இவ்வாறு தோன்றிய தமிழ் எழுத்துகளும் வட்டெழுத்துகளும் படிப்படியாக பிரிந்து வளர்ந்து முழு நிலையை அடைந்தன. இவை வளர்ச்சி பெற காரணங்கள் உண்டு. விரைவாக எழுதுதலால் ஏற்படும் மாற்றம், அழகுக்காக இடப்பட்ட கோடு வளர்ச்சி பெறல், எதன்மேல் எழுதப்படுகின்றதோ அப்பொருளின் திண்மை என்ற காரணங்களை முக்கியமாகக் கூறலாம்.

எழுத்துகளுக்கு அழகு அளிப்பதற்காக சில வடிவங்களின் தலையில் முதலில் குறுக்கே கோடு இடப்பட்டது. இவ்வாறு எழுதப்பட்ட வடிவை கையை பல முறை எடுத்து எடுத்து எழுதல் வேண்டும். ஆனால் இதையே விரைவாக எழுதும் போது கையை எடுக்காமலேயே எழுத முற்படுகிறோம். இதன் பயனாய் எழுத்துகள் படிப்படியாய் மாற்றம் பெறுகின்றன. இது தவிர கல்லில் எழுதுவதற்கும் ஓலையில் எழுதுவதற்கும் வேறுபாடு உண்டு. அதனாலும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

# கல்வெட்டு எழுத்துகள் கற்போம்

## உயிர் எழுத்துகள்



# கல்வெட்டு எழுத்துகள் கற்போம்

## மெய்யெழுத்துகள்



## கல்வெட்டு எழுத்துகள் - உயிர்மெய்



லளவுநெடுநிலந்தாழநிமிர்ந்திடுசெணணப்பட்டணத்தெ
ஸ்ரீசஙகணபுவனயாகண பணடாரகாரி யடாரதசும்மதலை
றுபுலவாகளபெருமாணமயிலையமபதியாணதெயவ
பூவுஞமததிருவளளுவனா திருக்குறடனிறறி
வளமபறறிய + இருபுனலுமவாயநதமலையுமவருபுனலுமவ
லாணவநாட்டிறகுதபபு எணபதனபொருளாயெனனுஙாயந
வலலுவ ஸ்ரீ புஸ்ரீ ஶாலிவாஹநஶகாவ சத்ஸள சய
சசெலலாநினற இஂஙிஂ ஹுஂ சத ஆணி
ல உஹவாதி யககுமெறசெலலாநினறஜுஹ
ாநு நபததிலவாராதியிநகூத்து யொரககாரணமபாரதச
உஹத்திநததிலீதுணுடிருபததெதழு துபாவுசணடுவ
லவாஹூவா வநசபெணணைபவிதத்தென

1818

# "வட்டெழுத்துக் கல்வெட்டுகள்"

Made with KINEMASTER

https://youtu.be/BGhouz1Fp5M

https://youtube.com/playlist?list=PLRVmwz05bmXXmZLQtPwQr-DN3gwLcgZID

# கிரந்தம்

கிரந்தம் என்பது ஒரு வகை எழுத்து ஆகும். கிரந்தம் என்ற சொல் வடமொழியில் நூல் என்று பொருள்படும். எனவே, நூலை எழுதுவதற்கு அடிப்படையான எழுத்தையும் கிரந்தம் என்றே குறிப்படுகின்றனர். பொ.ஆ. 3ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழ் நாட்டில் தமிழில் பழமையான வடிவமான தமிழி எழுத்திலிருந்து வளர்ச்சி பெற்ற எழுத்துக்களான தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் ஒரு சேர கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில் தமிழ் மொழியின் ஒலி அல்லாது வடமொழியின் ஒலிவரும் இடங்களிலும் வடமொழிச் சொல்லை எழுத நேர்கின்ற பொழுதும் கிரந்த எழுத்தைத் தமிழ் நாட்டில் பயன்படுத்தியிருக்கின்றனர்.

# தற்கால கிரந்த எழுத்துக்கள்



தமிழகத்தில் இவ்வெழுத்து பல்லவர்களால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. பல்லவர் ஆட்சியில் பிராகிருத மொழி செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டில் சமஸ்கிருத நூல்கள் பல இயற்றபட்டன. இவ்வகையில் பொதுவாகக் காலத்தால் முற்பட்டது துவக்ககாலப் பல்லவ மன்னன் சிம்மவர்மனின் (பொ.ஆ. 295) மஞ்சிக்கல்லுக் கல்வெட்டைக் (குண்டூர், ஆந்திரா) கூறலாம் . அடுத்த நிலையில் சிவஸ்கந்தவர்மனின் மயிதவோலு, கிரஹடகள்ளி (ஆந்திரா) போன்ற செப்பேடுகளைக் கூறலாம். தமிழகத்தில் கிடைத்தனவற்றுள் காலத்தால் முற்பட்ட கிரந்த எழுத்துக்களைச் சிம்மவிஷ்ணுவின்(பொ.ஆ.650) பள்ளன்கோயில் செப்பேட்டிலேயே காணமுடிகிறது. தமிழகத்தில் கிடைக்கும் செப்பேடுகளில் பெரும்பாலும் முதற்பகுதி சமஸ்கிருதத்திலும், பிற்பகுதி தமிழிலுமே உள்ளன என்பதற்குப் பின்வரும் செப்பேடுகளைக் கூறலாம். பள்ளன்கோயில் - சிம்மவிஷ்ணு, கூரம் - பரமேஸ்வரவரமன், காசாக்குடி, தண்டந்தோட்டம், புல்லூர் - நந்திவர்மன், கொற்றங்குடி, வேலூர்பாளையம் - மூன்றாம் நந்திவர்மன் , உன்னக்குரவயம் - முதலாம் பரமேஸ்வரவர்மன்.